www.tamilarangam.net



185

# முன்னேறிய படைகளை தடுத்து நிறுத்திய புலிகள்

வடக்கு-கிழக்கு மாகாணசபையை கலைக்க வேண்டும் என்றும், அதன் பின்னர் அங்கு தேர்தல் நடந்தால் புலிகளின் மக்கள் முன்னணி போட்டியிடும் என்றும் புலிகள் கூறிவந்தனர்.

வடக்கு-கிழக்கு மாகாண சபையை கலைப்பதற்கு பிரேமதாசாவும் விரும்பினார்.

**அமிர்தலிங்கத்தின் மரணச் சடங்கில் கலந்துகொண்டபோது, திருமலையில் வைத்து நடத்தப்பட்ட செருப்பு வீச்சை அவர் மறக்கவில்லை.**

'வடக்கு-கிழக்கு மாகாண முதல்வரான வரதராஜப் பெருமாள் நாட்டை

வடக்கு-கிழக்கு மாகாண சபைக் கலைப்புடன் மிக முக்கியமான உண்மை ஒன்றை புலிகள் நிரூபித்தனர்.

**இலங்கை அரசு தனது படைபலம் மற்றும் பலம், வளம் கொண்டு முயன்றால் என்ன, வேறு பலம் பொருந்திய வல்லாதிக்க துணைகளை நாடினால் என்ன, விடுதலைப் புலிகள் பங்குகொள்ளாத, தீர்வுகள் பயனளிக்க மாட்டாது.**

வடக்கு-கிழக்கு மாகாணசபை கலைப்பிற்கு பின்னர் அரச படைகளுடன் புலிகளின் முறுகல் நிலை தீவிரமானது.

வவுனியாவில் படையினருடன் புலிகளுக்கு பிரச்சனை ஏற்பட்டது. முகாம்களை

## மூவரைப் பிடித்தனர்

மட்டக்களப்பு கல்முனையில் மூன்று இராணுவத்தினர் புலிகளால் பிடிக்கப்பட்டனர்.

அந்த மூன்றுபேரும் கல்முனை மாடிவீட்டு இராணுவ முகாமைச் சேர்ந்தவர்கள்.

**முகாம் பொறுப்பதிகாரிக்கு தெரியாமல் முகாமிலிருந்து நைசாக நழுவி குடியிருப்புப் பகுதிகளுக்கு அவர்கள் சென்றபோது புலிகளிடம் மாட்டிக்கொண்டனர்.**

தாம் வந்த நோக்கத்தை கூறமுடியாத தர்மசங்கடமான நிலையில் அவர்கள் தடு

"1948ம் ஆண்டில் இருந்த சிங்கள இனவாத அரசால் குடியுரிமை வாக்குரிமை ஆகியன பறிக்கப்பட்ட தமிழ் மக்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டும், வாழ்விடங்களைவிட்டு கலைக்கப்பட்டும் வருகிறார்கள்.

மலையக மக்களை கலந்து பேசாமல் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் மூலம் அவர்கள் நாடு கடத்தப்பட்டனர்.

**மலையகம் வாழ் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எனக் கூறிக்கொள்வோர்கள் தமது சுயநலனுக்காக தம் மக்களைக் காட்டிக் கொடுக்கிறார்கள்" என்று அறிக்கையில் சாடியிருந்தனர்.**

இ.தொ.கா.மீதும், அதன் தலைமைமீதும்

**இருக்கிறோம்.**

இலங்கை அரசு இனப் பிரச்சனை தொடர்பாக எங்களுடனும், ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் பேச்சு நடத்த வேண்டும்." என்று சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக பிரேமதாசாவுக்கும் அவர் ஒரு கடிதம் எழுதினார்.

பேச்சு நடத்த தம்மை அழைக்குமாறு கூறிய பிரேமச்சந்திரன், அந்த கடிதத்தின் இறுதியில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

**'பேச்சுவார்த்தையில் அந்தரங்கத்தையும் இரகசியத்தையும் நாம் பாதுகாப்போம்.'**

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அத்தனைதூரம் கேட்டுக் கொண்டதால், பிரேமதாசா அரசு அவர்களுடன் பேச்சு நடத்த முன்வந்தது.

• முதற்கட்ட பேச்சின் பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். கொடுத்த செய்தி: "பேச்சு திருப்தி அளிக்கும் பட்சத்தில் வரதராஜப் பெருமாளும் பத்மநாபாவும் வந்து கலந்து கொள்வர்"

எனினும் பின்னர் அம் முயற்சி கைகூடவில்லை.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புடன் பேச்சு நடத்தியதை புலிகள் காட்டமாக எதிர்த்தனர்.

பின்னர் புலிகள் அரசு பேச்சு முறிந்தபின்னர், பிரேமதாசா அரசு ஈ.பி.டி.பி, புளொட் போன்ற அமைப்புக்களுடன் நெருக்கத்தை அதிகரித்தது. அதிலும் ஈ.பி.டி.பி.யுடனேயே அதிக நெருக்கம் ஏற்பட்டது.

அதனால் பிரேமதாசா அரசுடன் நின்ற இயக்கங்களை பிரேமதாசாவின் செல்லப் பிள்ளைகள் என்று பின்னர்



விட்டுச் சென்றுவிட்டார். எங்கிருக்கிறார் என்றே தெரியவில்லை. எனவே செயற்படாத மாகாண சபையை கலைப்பதில் தவறு இல்லை என்று கூறியது அரசு.

ஆனால் மாகாண சபையை கலைத்து தேர்தல் நடத்த சட்டத்தில் இடமில்லை.' எனவே அதற்கு வழிசெய்யும் சட்டம் ஒன்று பாராளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது.

**வடக்கு-கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டது.**

கலைப்பு நடந்தபோது வடக்கு-கிழக்கு மாகாணசபை முதல்வர் வரதராஜப் பெருமாள் இந்தியாவில் ராஜஸ்தான் மாநிலத்தில், கறுப்புப் பூனைகளின் பாதுகாப்பில், தனக்காக ஒதுக்கப்பட்ட தனி மாளிகையில் இருந்தார்.

## கலைப்பும் மகிழ்ச்சியும்

மாகாண சபையை கலைத்து தேர்தல் நடத்தினால் பங்கு கொள்ளலாம் என்று மாத்தையா, யோகி ஆகியோர் கூறிய

புலிகள் தொடுத்த மறைமுகமான தாக்குதலே அதுவாகும்.

இ.தொ.காவுக்கு மாற்றாக மலையக மக்கள் முன்னணி உருவாகும் என்று புலிகள் மட்டுமன்றி பலரும் அன்று எதிர்பார்த்தனர்.

**இன்று பாராளுமன்ற மாயையில் மலையக மக்கள் முன்னணியும் அதன் தலைவரும் மீளமுடியாமல் சிக்கிவிட்டதாகவே தெரிகிறது.**

புலிகளின் மக்கள் முன்னணி நடத்திய கரிநாள் பூரண வெற்றியளித்தது.

## பரவாயில்லை

**பிரேமதாசா அரசுடன் நட்புறவை ஏற்படுத்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். விரும்பியது. நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த சுரேஸ் பிரேமச்சந்திரன் அந்த முயற்சியில் ஈடுபட்டார்.**

கொழும்பில் இருந்து சுரேஸ் பிரேமச்சந்திரன் விடுத்த அறிக்கை கொஞ்சம் அதிர்ச்சியானது:

**"வடக்கு-கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டது குறித்து நாம் கவலைப்படவில்லை. ஏனெனில் அது அதிகாரமில்லாத அமைப்பாகவே இருந்தது. வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு நியாயமான, நீதியான தேர்தல் நடத்தப்பட்டால் நாம் போட்டியிடத் தயாராக**

ஈ.பி.ஆர்.எல்.எஃப். கேலி செய்தது.

புலிகள்-அரசு பேச்சு முறிவுக்கான பொறி மட்டக்களப்பில் கிளர்ந்தது.

போர் மூள அப்பொறி காரணமாகியது.

(தொடர்ந்து வரும்)

போதும், பிரபாகரன் அதனை விரும்பவில்லை.

**'தேர்தலில் போட்டியிடுவது இயக்கப் போராளிகளுக்கு சோர்வை ஏற்படுத்தும், அவர்களது போர்க்குணத்தை மழுங்கடிக்கும். சிங்கள அரசை நம்ப முடியாது. ஏமாற்றுவார்கள். பலம் இல்லையானால் பணியவே மாட்டார்கள்' என்பதே பிரபாகரனின் உறுதியான நம்பிக்கை.**

விட்டு வெளியேறிய படைகளை புலிகள் தடுத்து நிறுத்தினர்.

தமது முகாம்களை அண்டிய பகுதிகளில் புலிகள் பதுங்கு குழிகளை வெட்டி தயாராகிறார்கள் என்று வடக்கு-கிழக்கில் உள்ள படை அதிகாரிகள் ஜனாதிபதிக்கும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னாவுக்கும் தகவல்களை அனுப்பிக்

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

இதனை தனக்கு நெருக்கமானவர்களிடம் அடிக்கடி கூறியிருக்கிறார். ஆனால் மாகாண சபைக் கலைப்பு பிரபாகரனுக்கு ஒருவிதத்தில் மகிழ்ச்சிதான்.

**இலங்கை-இந்திய அரசுகள் தமிழ் பேசும் மக்களது பிரதிநிதிகளுடன் கலந்து பேசாமல், கருத்து அறியாமல் கொண்டு வந்த அரைகுறைத் தீர்வுதான் மாகாண சபை.**

இந்திய அரசு நடத்திய போலியான தேர்தல் மூலம் உருவானதுதான் வடக்கு-கிழக்கு மாகாணசபை.

**தீர்வும் தவறு, அதன் மூலம் உருவான சபையும் தவறு என்பதால், அவை உருவாகக் காரணமானவர்கள் மூலமே அவற்றை செயலிழக்கச் செய்யவேண்டும் என்று பிரபாகரன் நினைத்தார். அதனால்தான் மாகாணசபையை கலைத்தால் தேர்தலில் பங்குகொள்ள தயார் என்பதை தந்திரோபாயமான கோரிக்கையாக முன்வைக்க அனுமதித்தார்.**

அந்த வகையில் வடக்கு-கிழக்கு மாகாணசபைக் கலைப்பு பிரபாகரனுக்கு மகிழ்ச்சியே.

இந்தியப்படை அனுப்பப்பட்டது தவறு என்று ஒப்புக்கொண்டு, வி.பி.சிங் தலைமையிலான இந்திய அரசு தமது படைகளை குறிப்பிட்ட காலக்கெடுவுக்கு முன்னரே வாபஸ் பெற்றுக்கொண்டது.

**இலங்கை-இந்திய ஒப்பந்தம் என்பது எந்த அரசுக்களுக்கிடையே நடைபெற்றதோ, அந்த அரசுகளாலேயே பலி கொடுக்கப்பட்டது.**

கொண்டிருந்தனர்.

உத்தரவு வரும்வரை பொறுமையாக இருக்கும்படி கொழும்பில் இருந்து தகவல் போனது.

**வவுனியா பகுதியில் முன்னேற முயன்ற படையினரை புலிகள் தடுத்து நிறுத்தினார்கள்.**

மோதலுக்கு தயாரான சூழ்நிலை, எப்போது மோதல் வெடிக்கும் என்று எங்கும் பதற்றம் நிலவியது.

கொழும்பில் இருந்து அவசர உத்தரவு பறந்தது.

"முகாம்களுக்கு உடனே திரும்புக!"

அதனால் படைகள் திரும்பின. மோதல் தவிர்க்கப்பட்டது.

மறுபடி போர் மூண்டால் எவ்வாறு செயற்படுவது, எங்கெங்கு இலக்கு வைப்பது என்பதுதான் புலிகளின் சிந்தனை.

**போர் எப்படியும் மூளத்தான் போகிறது. மூண்டதும் நாம் முந்திக் கொள்ளவேண்டும், போர் நிறுத்தம், பேச்சுவார்த்தை மூலம் அரசாங்கம் பயனடைய விடக்கூடாது. பலனை நாம்தான் அறுவடை செய்து கொள்ள வேண்டும் என்று புலிகள் முடிவு செய்து கொண்டனர்.**

சர்வகட்சி மாநாடு என்று பிரேமதாசா காலத்தை இழுத்தடிப்பது, தமக்கு சாதகமான காலகட்டத்தில் மீண்டும் இராணுவ பலத்தை தமிழர்மீது கட்டவிழ்த்து விடுவதற்காகவே என்று புலிகள் கூறினர்.

காலத்தை இழுத்தடிப்பது மூலம் தமிழர்களது அரசியல் இராணுவ தலைமையை பலவீனப்படுத்தி சிதறடிப்பதே பிரேமதாசாவின் நோக்கம் என்றும் புலிகள் கூறினார்கள்.

மாறியது புலிகளுக்கு சந்தேகத்தைக் கொடுத்துவிட்டது.

மூவரையும் பிடித்து தடுத்து வைத்தனர் புலிகள். முகாம் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டபோது அவர்கள் வெளியே சென்றதே தனக்கு தெரியாது என்று கூறிவிட்டார்.

இருவாரங்களுக்குப் பின்னர் மூன்று இராணுவத்தினரும் புலிகளால் விடுதலை செய்யப்பட்டனர்.

## மலையகத்திற்காக

மலையக தமிழ் மக்களது குடியுரிமை பறிக்கப்பட்டபோது தந்தை செல்வா குரல் கொடுத்தார்.

அதனை கூட்டணியினர் அந்தக் காலத்தில் கூறாத மேடையில்லை. ஆனாலும் பாராளுமன்றத்தில் குரல் கொடுத்ததுக்கு புறம்பாக வேறு வழிகளில் மலையக மக்களுக்காக கூட்டணியினர் போராடியதில்லை.

**திம்பு பேச்சுவார்த்தையில் மலையக மக்களுக்கான கோரிக்கையையும் சேர்த்து முன்வைத்ததும் ஏனைய போராளி இயக்கங்களேயாகும்.**

1990ல் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் மலையக மக்கள் மீதான இராணுவ கெடுபிடிகளை எதிர்த்து பூரண கரிநாள் அனுஷ்டிக்கப்பட்டது.

இலங்கை அரசுடன் புலிகள் பேச்சு நடத்திக் கொண்டிருந்தபோதே, இக் கரிநாள் அனுஷ்டிக்கப்பட்டது.

இக்காலகட்டத்தில் மலையக மக்கள் முன்னணிக்கும் புலிகளுக்கும் இடையே நட்பு ஏற்பட்டிருந்தது.

மலையக மக்கள் முன்னணி தலைவர் சந்திரசேகரன், பி.ஏ.காதர் ஆகியோர் புலிகளுடன் நெருக்கமான நட்பு கொள்ள தொடங்கியிருந்தனர்.

நுவரெலியாவில் நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றில் சந்திரசேகரன் கைது செய்யப்பட்டார்.

**இக்கால கட்டத்திலேயே 20.05.90 அன்று பூரண கரிநாள் அனுஷ்டித்தனர் புலிகளின் மக்கள் முன்னணி.**

புலிகளின் அரசியல் பிரிவான புலிகள் மக்கள் முன்னணி என்னும் பெயருக்கு ஒத்ததாகவே தமது அமைப்புக்கும் மலையக மக்கள் முன்னணி என்று சந்திரசேகரன், காதர் போன்றோர் பெயர்சூட்டினார்களோ தெரியவில்லை.

**மலையக மக்கள் மீதான இராணுவ ஒடுக்குமுறை, மலையக மக்களின் குடியுரிமை பறிப்பு என்பவற்றுக்கு எதிராக காட்டமான அறிக்கை விட்ட புலிகள், அந்த அறிக்கையில் குறிப்பிட்ட இன்னொரு விடயம் முக்கியமானது. அது இதுதான்:**

## விடுதலைப் புலிகளும் 'றோ'செய்த குளறுபடிகளும்

இலங்கைப் பிரச்சனையில் 'றோ' நடத்திய குளறுபடிகளிலேயே மிகவும் அபத்தமானதாக அமைந்தது இடுப்பு எலும்பும் கை கால்களும் உடைந்து சிகிச்சைபெற்று வந்த சில விடுதலைப் புலிகளைத் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பிடித்து வைத்த நிகழ்ச்சியாகும். இந்தியாவில் பல்வேறு நகரங்களில் வெடிகுண்டுத் தாக்குதல்களை இவர்கள் செய்யப் போவதாகக் கூறப்பட்டது!

ராஜீவ் ஜெயவர்த்தனா ஒப்பந்தம் போடப்பட்டு அமைதிப்படை புலிகள் மீது தாக்குதல் நடத்த ஆரம்பித்து ஓராண்டு கழித்து 1988 ஆகஸ்ட் மாதத்தில் அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி இருமுறை சென்னைக்கு வந்தார். அவர் புலிகளைக் கடுமையாக விமரிசித்துப் பேசிவிட்டுச் சென்ற அன்றிரவே சென்னையிலும் மதுரையிலும் 152 விடுதலைப் புலிகள் கைது செய்யப்பட்டார்கள்.

**இவர்களில் பலரும் அரசாங்க மருத்துவமனையிலிருந்து நேரே சிறைக்குக் கொண்டு வரப்பட்டார்கள். சிறை பிடிக்கப்பட்ட அத்தனை பேரும் இந்தியாவுக்குக் கள்ளத் தோணியில் வந்ததாகவும், இங்கே வெடிகுண்டுத் தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் டிடென்ஷன் ஆர்டரில் கூறப்பட்டது.**

ஆனால் நோய்வாய்ப்பட்டு சிகிச்சைக்காக இந்தியாவுக்கு வந்த இவர்களில் பலரையும் இங்கு அழைத்து வந்ததே இந்திய அரசாங்கம்தான்! 1987 ஆகஸ்ட் 12ஆம் திகதியன்று சிங்கள இராணுவத் தாக்குதலில் காயமடைந்த 15 விடுதலைப் புலிகளை இந்திய விமானப்படை ஹெலிகொப்டரில் மதுரைக்கு அழைத்து வந்த புகைப்படம்கூடப் பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது. அவர்களெல்லாம் கைது செய்யப்பட்டார்கள்.

**வித விதமான காயங்கள் நோய்களுக்காக மதுரை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த புலிகளின் மெடிக்கல் ரெக்கார்டுகளிலேயே அவர்கள் மதுரைக்கு வந்த தேதி உட்பட குறிப்பிடப்பட்டிருந்தது.**

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான காஸ்ரோ சென்னையில் விடுதலைப் புலிகளின் அலுவலகத்தில் பொறுப்பாளராக இருந்தவர். வவுனியாவில் புலிகள் பிடித்து வைத்திருந்த இந்திய இராணுவ வீரரை விடுவித்த நிகழ்ச்சிக்கு காஸ்ரோவை சென்னையிலிருந்து விசேட விமானத்தில் அழைத்துப் போய் திரும்பக் கொண்டு வந்ததும் அரசாங்கம்தான்!

**'றோ' அதிகாரிகள் எந்த முறைகேடு பற்றியும் கவலைப்படாமல் நடவடிக்கை எடுத்தார்கள். மதுரை மாவட்ட கலெக்டர் புலிகளைத் தடுப்புக் காவலில் வைப்பதற்கான உத்தரவைப் பிறப்பித்தார் தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் கைது செய்வதற்கான உத்தரவு போடும் அதிகாரமே கலெக்டருக்கு கிடையாது என்பதைப் பற்றிகூட 'றோ' கவலைப்படவில்லை.**

கடைசியில் இந்தச் சட்டக் குளறுபடியைச் சமாளிக்க, இன்னோர் அபத்தத்தில் தமிழக அரசு இறங்க வேண்டியதாயிற்று. சட்டப்படி அதிகாரமுள்ள தமிழக அரசின் டெபுடி செக்ரெட்டரி (ஏற்கனவே கைதானவர்களை மீண்டும் கைது செய்ய) இன்னோர் உத்தரவு போட்டார். இந்த உத்தரவில், கலெக்டருக்கு உத்தரவிட அதிகார வரம்பு இல்லை என்பதும் குறிப்பிடப்பட்டது.

**திராவிடர் கழகம் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. சுப்ரீம் கோட்டிலும் ரிட் தாக்கல் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அதற்குள்ளாக வீட்டுக்காவலிலிருந்த கிட்டு உண்ணாவிரதம் மேற்கொள்ளவே, அவரையும் கைதானவர்களையும் இந்திய அரசு அவசர அவசரமாக யாழ்ப்பாணத்துக்கு விமானத்தில் கொண்டு போய் இறக்கி விட்டுவிட்டு விவகாரத்திலிருந்து ஒரு வழியாகக் கழட்டிக் கொண்டது.**

சுப்ரீம் கோர்ட்டில் மட்டும் ஹேபியஸ் கார்ப்பஸ் மனு தாக்கல் செய்யப்பட்டு விசாரணை நடந்திருந்தால், நிலைமை மேலும் சிக்கலாகியிருக்கும். அதிகார வரம்பில்லாத கலெக்டரின் உத்தரவின்கீழ் தடுப்புக்காவலில் ஒருவரை வைத்திருந்ததற்காகப் பல லட்ச ரூபாய் நஷ்டஈடு கூடக்கேட்டு வாங்கியிருக்க முடியும். வேறு பல ஹேபியஸ் கார்ப்பஸ் மனுக்களில் சுப்ரீம் கோர்ட் இவ்வாறு நஷ்டஈடு வழங்கியிருக்கிறது.

-நன்றி-ஜூனியர் விகடன்-1990-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்